டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 12.12.2024 வியாழக்கிழமை | பக்கங்கள் 26 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 145 - Madurai | Online Edition

# பாரத் சன்னா பருப்பு, பாசி பருப்பு, மசூர் பருப்பு நுகர்வோருக்கு விற்பனை

புது தில்லி, டிச.11

பாரத் பருப்பு திட்டத்தை அரசு அறிமுகம் செய்துள்ளது. 2023 ஜுலையில் சன்னாவை சன்னா பருப்பாக மாற்றி நுகர்வோருக்கு சில்லறை விற்பனைக்காக அதிகபட்ச சில்லறை விலையில் கிலோ ஒன்றுக்கு ரூ.60 மற்றும் 30 கிலோ பேக்கிற்கு கிலோ ரூ.55 என்ற விலையில் செப்டம்பர் 30, 2024 வரை அறிமுகப்படுத்தியது. மேலும் 3 லட்சம் டன் சன்னா இருப்பை சில்லறை விற்பனைக்கு முறையே கிலோ ரூ.70 மற்றும் ரூ.58 என்ற விலையில் சில்லறை விற்பனைக்கு ஒதுக்குவதன் மூலம்



விரிவுபடுத்தப்பட்டுள்ளது. பாசிப்பருப்பு மற்றும் மசூர் பருப்பு களுக்கும் பாரத் பிராண்ட் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. பாசிப்பயறு பாசிப்பருப்பு ஆக மாற்றப்பட்டு பாரத் பிராண்டின் கீழ் சில்லறை விற்பனைக்கு முறையே கிலோ ரூ.107 மற்றும் ரூ.93க்கு விற்கப்படுகிறது. பாரத மசூர் பருப்பு கிலோ ரூ.89க்கு விற்கப் படுகிறது. இதுவரை மொத்தம் 12.35 லட்சம் டன் பாரத் சன்னா பருப்பு, 5,663.07 டன் பாரத் பாசிப் பருப்பு மற்றும் 118 டன் பாரத் மசூர் பருப்பு ஆகியவை நுகர்வோருக்கு விற்பனை செய்யப்பட்டு உள்ளன.

பாரத் ஆட்டா மற்றும் பாரத் அரிசி ஆகியவை முறையே 06.11.2023 மற்றும் 06.02.2024 ஆகிய தேதிகளில் பொது நுகர்வோருக்கு மானிய விலையில் வழங்குவதற்காக அறிமுகப் படுத்தப்பட்டன. முதற்கட்டமாக 30.06.2024 வரை பாரத் ஆட்டா கிலோ ஒன்றுக்கு ரூ.27.50 என்ற விலையிலும், பாரத் அரிசி கிலோ ரூ.29 என்ற விலையிலும் விற்பனை செய்யப்பட்டு வந்தது.

இரண்டாம் கட்டமாக, பாரத் ஆட்டா கிலோ ஒன்றுக்கு ரூ.30 என்ற விலையிலும், பாரத் அரிசி கிலோ ரூ.34 என்ற விலையிலும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. 30.06.2024 வரை முதல் கட்டத்தின் போது மொத்தம் 15.20 லட்சம் மெட்ரிக் டன் பாரத் ஆட்டா மற்றும் 14.58 லட்சம் மெட்ரிக் டன் பாரத் அரிசி நுகர்வோருக்கு கிடைத்தன. நடப்பு இரண்டாம் கட்டத்தில், 2,952.25 மெட்ரிக் டன் பாரத் ஆட்டா மற்றும் 3,413.35 மெட்ரிக் டன் பாரத் அரிசி பொது நுகர்வோருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மக்களவையில் நேற்று கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் அளித்த பதிலில் மத்திய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத் துறை இணையமைச்சர் பி.எல்.வர்மா இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# பாரம்பரிய வேளாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி

சேலம், டிச.11

சேலம் மாவட்டம், மேச்சேரி வட்டாரம் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மைய கூட்ட அரங்கத்தில் வேளாண்மைத் துறை சார்பில் பாரம்பரிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 80 விவசாயிகளுக்கு இயற்கை வேளாண்மை மற்றும் அங்கக இடுபொருட்கள் தயாரிப்பு குறித்த பயிற்சிகள் வழங்கப்பட்டது.

இப்பயிற்சியை எஸ்.ஷீரின், வேளாண்மை உதவி இயக்குநர் மேச்சேரி அனைவரையும் வரவேற்று வேளாண்மைத்துறை திட்டங்கள் பற்றி எடுத்து கூறினார். முன்னிலை முனைவர் பா.கண்ணன், வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய திட்டம்), சேலம், இயற்கை உரங்கள் தயாரிப்பு முறைகள், உயிர்ம வேளாண்மை கோட்பாடுகள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

முனைவர் சீ.நாகராஜன், வேளாண்மை துணை இயக்குநர் (உழவர் பயிற்ச்சி நிலையம்) சேலம் உயிரியல் முறையில் பூச்சி கட்டுப்பாடுகளில் ஒட்டுண்ணிகள், இன கவர்ச்சி பொறிகளின் பயன்கள் முக்கியத்துவம் குறித்து விளக்கம் அளித்தார். அர்ஜுனன், முன்னோடி இயற்கை விவசாயி பண்ணை கழிவுகளில் மக்கிய உர தயாரிப்பு தொழில்நுட்பங்கள் பஞ்சகாவியா, ஜீவாமிர்தம் பற்றி விளக்கம் அளித்தார். வேளாண்மை உதவி இயக்குநர் சங்ககிரி விமலா, விதை சான்று அலுவலகம் கவுரிசங்கர் – விதை சான்று அலுவலர் (தொழில் நுட்பம்), வேளாண்மை அலுவலர் ர்த்தனா, வேளாண்மை துணை அலுவலர் அசோக் குமார் உட்பட அனைத்து வேளாண்மைத் துறை அலுவலர்கள் மற்றும் தொகுப்பு ஒருங்கிணைப்பாளர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு பயிற்சியில் இயற்கை வேளாண்மையின் முக்கியத்துவம் மற்றும் இயற்கை வேளாண்மையில் விளைந்த பயிர்களால் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களின் சந்தை மதிப்பு பற்றிய விவரங்களை எடுத்துரைத்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# காய்கறி மற்றும் பழங்களில் அறுவடை பின்சார் தொழில் நுட்பங்கள் பயிற்சி

கடலூர், டிச.11

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில், 10.12.24 அன்று காய்கறி மற்றும் பழங்களில் அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சியை வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க. நடராஜன், துவக்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார்.




மயிலாடுதுறை தோட்டகலை துறையில் இருந்து, தோட்டகலை உதவி இயக்குநர் சிறப்புரை வழங்கினார். இப்பயிற்சிக்கு முனைவர் சு.கண்ணன், காய்கறி பழங்களில் பாதுகாக்கும் முறைகள், பயன்படுத்தும் முறைகள், மதிப்புக்கூட்டுதல் செய்யும் முறைகள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். முனைவர் கு.காயத்ரி, வாழையில் சாகுபடி முறைகள் மற்றும் முட்டை அமிலம், வாழை கன்றுகள் நடவு செய்ய பயன்படுத்தும் Pairing and Pralinage (கிழங்கில் நேர்த்தி செய்யும் முறை) பற்றி செயல் விளக்கமாக விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

மேலும் பலா மற்றும் முந்திரி பயிரில் ஒட்டு கட்டுதல் பற்றி செயல் விளக்கமாக விவசாயிகளுக்கு செய்து காண்பிக்கப் பட்டது. முனைவர் கு.பாரதிகுமார், காய்கறி மற்றும் பழங்களில் சாகுபடி தொழில் நுட்பங்கள் பற்றியும் மற்றும் இரகங்கள் பற்றியும் விவசாயிகளுக்கு தெளிவாக கூறினார். முனைவர் ஜெ.ஜெயகுமார், காய்கறி மற்றும் பழங்களில் பூச்சி நோய் தாக்குதல் பற்றி தெளிவாக எடுத்துரைத்தனர். இப்பயிற்சியில் மயிலாடுதுறை மாவட்டத்ததை சேர்ந்த 50 விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

# கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம்

11.12.2024

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 35 | 38 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 35 | 40 | 57 | உருளை (பிற) | 30 | 38 |
| 1B | கத்திரி(Nadu) | 45 | 50 | 57A | உருளை(ஊட்டி) | 30 | 50 |
| 2 | வெண்டை | 45 | 50 | 58 | மேரக்காய் | 20 | 26 |
| 3 | தக்காளி (நாடு) | 22 | 25 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 35 | 40 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 20 | 24 | 60 | கேரட் | 60 | 65 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 80 | 84 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 60 | 65 |
| 6 | புடலை | 30 | 36 | 62 | நூல்கோல் | 40 | 44 |
| 7 | பீர்க்கன் | 45 | 50 | 63 | டர்னிப் | 30 | 38 |
| 8 | சுரைக்காய் | 25 | 28 | 64 | மு.கோஸ் | 25 | 30 |
| 9 | பாகற்காய் | 30 | 38 | 65 | மு.கோஸ்(கலர்) | 0 | 0 |
| 10 | கொத்தவரை | 40 | 48 | 66 | காலிபிளவர் | 45 | 50 |
| 11 | பூசணி | 15 | 18 | 67 | பட்டாணி | 110 | 120 |
| 12 | அரசாணி | 18 | 22 | 68 | பூண்டு | 260 | 338 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 25 | 28 | 69 | இஞ்சி | 48 | 100 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 22 | 26 | 70 | புருக்கோலின் | 160 | 190 |
| 15 | சி.வெங்காயம் | 60 | 64 | 71 | பென்னி பீன்ஸ் | 80 | 86 |
| 16 | பெ.வெங்காயம் | 60 | 63 | 72 | குடமிளகாய் | 50 | 54 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 30 | 36 | 73 | ஊட்டி அவரை | 120 | 140 |
| 18 | பச்சை மொச்சை | 60 | 66 | 74 | பஜ்ஜி மிளகாய் | 0 | 0 |
| 19 | முருங்கை | 0 | 0 | 71A | | | |
| 20 | தேங்காய் | 54 | 58 | | | | |
| 21 | மாங்காய் | 55 | 60 | | | | |
| 22 | வாழைக்காய் | 28 | 32 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 42 | 46 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 55 | 60 | 75 | எலுமிச்சை | 50 | 60 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 40 | 50 |
| 26 | மரவள்ளி | 28 | 32 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 38 | 42 | 78 | பப்பாளி | 22 | 26 |
| 28 | கறிவேப்பிலை | 90 | 94 | 79 | மாதுளை | 120 | 180 |
| 29 | கொத்தமல்லி | 42 | 48 | 80 | திராட்சை | 60 | 70 |
| 30 | புதினா | 7 | 8 | 81 | மாம்பழம் | 150 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 20 | 22 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 200 |
| 32 | தண்டுக்கீரை | 20 | 22 | 83 | ஆரஞ்ச் | 50 | 70 |
| 33 | சுக்கிட்டி | 20 | 25 | 84 | சாத்துக்குடி | 60 | 70 |
| 34 | அரைக்கீரை | 20 | 22 | 85 | அன்னாசி பழம் | 50 | 55 |
| 35 | சிறுகீரை | 20 | 22 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு &வெந்தயம் | 20 | 25 | 87 | முலாம்பழம் | 45 | 50 |
| 37 | பருப்புக்கீரை | 20 | 22 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 45 | 50 |
| 40 | கோவக்காய் | 50 | 54 | 91 | பூவன் | 35 | 38 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 45 | 50 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 35 | 38 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 30 | 35 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 22 | 26 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 30 | 35 | 96 | நேந்திரன் | 60 | 65 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 42 | 46 | 97 | செவ்வாழை | 75 | 80 |
| 47 | சுண்டக்காய் | 150 | 160 | 98 | பேரிக்காய் | 150 | 165 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 45 | 48 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 40 | 44 |
| 50 | நிலக்கடலை | 60 | 65 | 101 | டிராகன் ப்ரூட் | 140 | 150 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 64 | 72 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 45 | 50 | | | | |
| 55A | துவரை | 60 | 65 | | | | |

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் காகித அடிப்படையிலான பொருட்கள் உற்பத்தி குறித்த திறன் மேம்பாட்டுப் பயிற்சி

கோயம்புத்தூர், டிச.11

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 19.12.24 மற்றும் 20.12.24 ஆகிய நாட்களில் காகித அடிப்படையிலான பொருட்கள் உற்பத்தி குறித்த திறன் மேம்பாட்டுப் பயிற்சி நடைபெற உள்ளது. வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர் உணவு பதன்செய் பொறியியல் துறையின் கீழ் செயல்படும் மாதிரி காகித ஆலை, விவசாய கழிவுகள் மற்றும் கழிவு காகிதங்களைப் பயன்படுத்தி காகித அடிப்படையிலான பொருட்களை தயாரிப்பதற்காக 1976 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இயந்திரங்கள், அதாவது காகித துண்டாக்கி இயந்திரம், காகித கூழ் தயாரிக்கும் இயந்திரம், அட்டை தயாரிக்கும் இயந்திரம், அட்டை நேர்த்தி இயந்திரம், உலர்த்தி, அச்சுஇயந்திரம் போன்றவை, கழிவுப் பொருட்களில் இருந்து காகித அடிப்படையிலான பொருட்களை தயாரிப்பதற்காக நிறுவப்பட்டுள்ளன.

**பயிற்சியில் பின்வரும் தயாரிப்புகள் கற்றுக் கொடுக்கப்பட உள்ளன**

- அலுவலக கோப்புகள்
- ஸ்பிரிங் கோப்புகள்
- நாடா கோப்புகள்

பயிற்சியானது கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், (பேருந்து நிறுத்தம் : தாவரவியல் பூங்கா) வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், உணவு பதன்செய் பொறியியல் துறை, மாதிரி காகித ஆலையில் வைத்து நடைபெறும்.

**பயிற்சி கட்டணம்**

ஆர்வமுள்ள நபர்கள் பயிற்சிக் கட்டணமாக ரூ.5000/- (ரூபாய் ஐந்தாயிரம்) + 18% ஜிஎஸ்டியை பயிற்சி தொடங்கும் நாளில் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விவரங்களுக்கு, பேராசிரியர் மற்றும் தலைவர், உணவு பதன்செய் பொறியியல் துறை, வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்- 641 003, மின்னஞ்சல் : processing@tnau.ac.in, கைப்பேசி எண் : 86680 41185 தொடர்பு கொள்ளலாம்.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!




# குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வேளாண்மைத்துறை மூலம் மானியத்தில் வேளாண் இடுபொருட்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கல்

புதுக்கோட்டை, டிச.11

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் வட்டாரத்தில் 11.12.24 காலை 10.30 மணியளவில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் மாஞ்சன்விடுதி கிராமத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.




இதில் புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலெட்சுமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) எஸ்.ஜெயபாலன், வேளாண்மை உதவி இயக்குநர் க.வெற்றிவேல், வேளாண்மை அலுவலர் மகேஸ்வரி மற்றும் பா.இளவரசி, பொன்தாரிணி கலந்து கொண்டனர். இக்கூட்டத்தை முன்னிட்டு கடந்த ஒரு வாரமாக அனைத்து உதவி வேளாண்மை அலுவலர்களும் விவசாயிகளிடமிருந்து கோரிக்கை மனுக் களை பெற்று சிறப்புத் திட்டங்களான கலைஞரின் ஒருங் கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம், பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம், பிரதம மந்திரியின் நுண்ணீர் பாசனத் திட்டம் போன்ற திட்டங்களில் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு 50 விவசாயிகளுக்கு ரூ.2.2 லட்சம் மானியத்தில் வேளாண் இடுபொருட்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. வேளாண்மைத்துறை சார்பாக அனைத்து திட்டங்களையும் விளக்கும் வகையில் கருத்துக்காட்சி வேளாண் உதவி அலுவலர்கள், அட்மா திட்ட பணியாளர்கள் மற்றும் பயிர் அறுவடை களப்பணியாளர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். குடுமியான்மலை மண் பரிசோதனை நிலையம் மூலம் விவசாயி களுக்கு மண் வளஅட்டை பதிவிறக்கம் செய்து வழங்கப்பட்டது.


Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
CML-6400119610
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# உயர் விளைச்சல் ரக பயறுகளில் விதைப்பண்ணை அமைத்து அதிக வருமானம் பெறலாம்



கோயம்புத்தூர், டிச.11

குறுகிய காலத்தில் அதிக மகசூல் தரும் வம்பன் 11 புதிய ரக உளுந்து பயிரை பயிரிட்டால் விவசாயிகள் நல்ல வருவாய் ஈட்டலாம் என கோவை விதைச்சான்று உதவி இயக்குநர் பி.ஆ.மாரி முத்து தெரிவித்தார்.

பயிறு வகை பயிர்கள் தானியப் பயிருக்கு அடுத்ததாக முக்கிய உணவுப்பொருளாக விளங்குகிறது. 20-30% வீதம் புரத சத்துமிக்க முக்கிய உணவாக உள்ளது. பயிறு வகை பயிர்களை பயிரிடும் பொழுது வளிமண்டல நைட்ரஜனை நிலைநிறுத்துவதில் முக்கிய பங்காற்றுகிறது. பச்சை பயிறானது 50-66 கிலோ/எக்டர் அளவும் உளுந்து பயிரானது 119-140 கிலோ/எக்டர் அளவும் நிலைநிறுத்து கிறது. மேலும், வேரின் அமைப்பு மண்ணின் புறத்தன்மையை மேம்படுத்துவதுடன் நீர் பிடிப்பு தன்மையை அதிகப்படுத்தி நுண்ணுயிர் பெருக்கத்தை பல மடங்கு கூட்டுவதோடு மண்ணின் கடினத்தன்மையை இலகு வாக்கி மண் வளத்திற்கு ஆதாரமாக விளங்குகிறது. இத்தகைய சிறப்புடைய பயிறு வகை பயிர்களை ஊடுபயிராகவும், வரப்பு பயிராகவும் மற்றும் மறுசுழற்சி பயிராகவும் சாகுபடி செய்யலாம். குறைந்த அளவு தண்ணீரை பயன்படுத்தி அதிக மகசூல் பெறலாம்.

மேலும், அவர் கூறியதாவது, பயறு வகைகளில் உளுந்து பயிர் மிக குறுகிய காலத்தில் அறுவடை செய்ய ஏற்றது. குறுகிய காலத்தில் நல்ல வருமானம் ஈட்டலாம். தொண்டாமுத்தூர் வட்டாரத் தில் இக்கரை போளுவாம்பட்டியில் அமைக்கப்பட்டுள்ள ஆதார நிலை 2 விதைப்பண்ணையை ஆய்வு செய்து கூறியதாவது, வம்பன் 11 என்ற புதிய உளுந்து இரகம் விவசாயிகளிடம் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. 70 முதல் 75 நாட்களில் அறுவடைக்கு தயாராகி விடும். ராபி பருவத்தில் பயிரிட்டால் நல்ல மகசூல் கிடைக்கும். உளுந்து பயிர்களை தாக்கும் இலை சுருள் நோய், மஞ்சள் மொசைக் நோய் போன்றவை இந்த ரகத்தை தாக்காது. பூக்கள் பூக்க ஆம்பிக்கும் தருணத்தில் Pulse wonder 2 கிலோ 1 ஏக்கர் என்றளவில் தெளிக்கும் போது காய்கள் மிகவும் திரட்சியாக மகசூல் தரும் என்றார்.

தரமான விதை உற்பத்திக்கு அதே ரகம் மற்றும் பிறரகப் பயிரில் இருந்து வயலை சுற்றி 10 மீட்டர் இடைவெளியை கடைபிடிப்பதால் பயிரின் இனத்தூய்மை பாதுகாக்கப்படும் புற ரகங்களில் 0.1 சதவீதம் மட்டுமே அனுமதிக்கப்படும் என்றும் கூறினார். ஏக்கருக்கு 600 முதல் 650 கிலோ மகசூல் கிடைக்கும். விவசாயிகள் இந்த பயிர் ரகத்தில் விதைப்பண்ணை அமைத்தால், நல்ல வருவாய் பெறலாம். விதைப்பண்ணை அமைக்க விதை சான்று துறை சார்பில் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்படும் என்றும், விதைப்பண்ணை அமைக்க தேவைப்படும் விதைகள் அந்தந்த வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பில் உள்ளது. இதை வாங்கி பயன்பெறலாம் என்றும் தெரிவித்தார். ஆய்வின் போது விதைச்சான்று அலுவலர் பேரூர் மற்றும் உதவி விதை அலுவலர் தொண்டாமுத்தூர் ஆகியோர் உடனிருந்தனர்.



# சிறு/குறு விவசாயிகள் பவர் டில்லர் வாங்கிட 20% கூடுதல் மானியம் தெரியுமா?



வேளாண்மை உற்பத்தியையும் விவசாயிகளின் வருமானத்தையும் அதிகரிக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது நாம் அறிந்ததே. அதுவும் இன்றைய சூழ்நிலையில் கிராமப் புறங்களில் உழவு செய்திடவும் களை எடுக்கவும் ஆட்கள் பற்றாக்குறையாக உள்ள நிலையில், முழுக்க முழுக்க இயந்திரத்தை சார்ந்த தான் இன்று விவசாய பணிகள் (விதைப்பு முதல் அறுவடை) நடைபெற்று வருகிறது.

இயந்திரங்களின் தேவையை உணர்ந்த தமிழக அரசு, தமிழக வேளாண் பொறியியல் துறையின் மூலமாக வேளாண் இயந்திரமயமாக்குதலுக்கான துணை இயக்கத் திட்டத்தினை செயல்படுத்திட நடப்பு 2024-25 வேளாண் நிதி நிலைக்கான அறிக்கையில் அறிவித்த படி, தனிப்பட்ட விவசாயிகளுக்கு 4000 எண்கள் பவர் டில்லர் (POWER TILLERS)யும் விசை களையெடுக்கும் கருவி 4000 எண்களும் (POWER WEEDER) வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலமாக விவசாயிகளுக்கு கூலியாட்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யப்படுவதோடு, குறித்த காலத்தில் பயிர் சாகுபடி, செய்திடவும் வழிவகுக்கப்பட்டுள்ளன. பவர் டில்லர் 1963யில் இந்தியாவில் அறிமுகப்படுத்தபட்டது. இன்று டிராக்டருக்கு அடுத்த படியாக இது உழவு மற்ற இதர வேலைகளுக்கு பயன்படுகிறது.

**இயந்திரங்களை எப்படி பெறுவது? மானியம் என்ன? தெரியுமா?**

உரிய ஆவணங்களுடன் (பட்டா, சிட்டா, அடங்கல், வங்கி பாஸ்புத்தகம் நகல் உள்ளிட்ட) உரிய அலுலகத்திற்கு (AGRI ENGINEERING) விண்ணப்பிக்க வேண்டும்.

தனிப்பட்ட விவசாயிகளுக்கு மானிய விலையில் 11 HP திறனுள்ள பவர் டில்லர் பெற அதிக பட்சமாக 1.20 லட்சமும், 8 HP முதல் 11 HP வரை குதிரை திறனுள்ள பவர் டில்லருக்கு அதிகபட்சமாக 1 லட்சம் வரை ஆதி திராவிட பழங்குடியின சிறு /குறு விவசாயிகள் / பெண் விவசாயிகளுக்கு மானியமாக வழங்கப்படுகிறது. மேலும் இத்திட்டத்தில் ஆதி திராவிட பழங் குடியின சிறு / குறு விவசாயிகளுக்கு அவர்களின் பங்களிப்புத் தொகையினை குறைத்து உதவிடும் வகையில் நடை முறையில் உள்ள மானியத்துடன் 20% கூடுதலான மானியம் தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத் தக்க தகவலாகும். இம்மானியத் தொகையானது இயந்திரங் களின் மொத்த விலைக்கு தகுந்தவாறு மாறுபடும்.




## விசை களை எடுக்கும் கருவி

பொது பிரிவினைச் சார்ந்த சிறு / குறு விவசாயிகளுக்கு நடைமுறையில் உள்ள மானியத்துடன் 10% கூடுதலான மானியமாக அதிகபட்சமாக 12600 விசை களை எடுக்கும் கருவிக்கு வழங்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக விசை களை எடுக்கும் கருவியின் மொத்த விலையில் தோராயமாக 80,000 எனில் 48,000 மானியம் போக மீதி விவசாயிகளின் பங்களிப்பாக 32,000 மட்டும் செலுத்தினால் போதும்.

## எப்படி செலுத்துவது?

விவசாயிகள் தங்களின் பங்களிப்பு தொகையினை இணைய வழியாக (RTGS/NEFT) அல்லது வங்கி வரைவோலை மூலமாக சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு அனுப்பிட வேண்டும்.

மேலும் இது சம்பந்தமான விபரங்களுக்கு வட்டார வேளாண்மை பொறியாளரை அணுகிட வேண்டும்.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# அரங்கினாம்பட்டி கிராமத்தில் கிராம முன்னேற்றக் குழு விவசாயிகளுக்கு பயிற்சி நடைபெற்றது

புதுக்கோட்டை, டிச.11

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டாரத்தில் வேளாண்மை – உழவர் நலத்துறையின் அட்மா விரிவாக்க திட்டத்தின் மூலம் கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டதின் கீழ் தேர்வு செய்யப்பட்ட அரங்கினாம்பட்டி கிராமத்தில் தேர்வு செய்யப்பட்ட கிராம முன்னேற்றக் குழு விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது.

இந்த பயிற்சிக்கு அரங்கினாம்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் தலைமை வகித்தார். இப்பயிற்சியில் கலந்து கொண்டு பேசிய திருமயம் வேளாண்மை உதவி இயக்குநர் ந.உமா, நடப்பு பருவத்திற்கு தேவையான நெல் இரங்கள் விதை நெல் நேர்த்தி தொழில்நுட்பம் உயிர் உரங்களின் பயன்பாடுகள், நெல் பயிரில் ஒருங்கிணைந்த முறையில் பயிர் பாதுகாப்பு தொடர்பான தொழில்நுட்பம் தொடர்பான தகவல்களையும் மண்பரிசோதனை செய்வதன் அவசியம், மண்ணில் உள்ள சத்துகளின் விபரம், மண் வளத்தை எவ்வாறு மேம்படுத்தலாம் என்றும் மண் எடுப்பதற்கு முன் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் விபரங்கள் பற்றியும் விவசாயிகளிடம் எடுத்து கூறினார். மேலும் கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டதின் கீழ் விவசாயிகளுக்கு வழங்கப்படும் இடுபொருட்கள் விபரங்கள், மானிய விவரங்கள் பற்றியும் விவசாயிகளிடம் எடுத்து கூறினார்.

மேலும் பயிற்சியில் கலந்து கொண்டு பேசிய உதவி வேளாண்மை அலுவலர் பத்மபிரியா, வேளாண்மை துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், விபரங்கள் பற்றியும் விவசாயிகளிடம் எடுத்து கூறினர். அட்மா திட்ட அலுவலர்கள் அட்மா திட்ட பயிற்சி மற்றும் செயல்விளக்க இடுபொருட்கள் வழங்குதல் பற்றியும், உழவன் செயலி பயன்பாடு பற்றியும் எடுத்துக் கூறினர். இப்பயிற்சிக்கான ஏற்பாட்டினை அட்மா திட்ட அலுவலர்கள் கு.நாகராஜன், க.தேவி மற்றும் ரா.ராஜீ ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# மக்காச்சோள படைப்புழு தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் தகவல்

திருச்சி, டிச.11

திருச்சி மாவட்டத்தின் 14 வட்டாரங்களிலும் தற்போது பரவலாக மக்காச்சோளம் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. பெரும்பாலான இடங்களில் மக்காச்சோள பயிர் 45-60 நாட்கள் வளர்ந்த தருணத்தை எட்டியுள்ளது.

மணச்சநல்லூர் வட்டாரம் கரிய மாணிக்கம் திருப்பட்டூர் பகுதிகளில் திருச்சி மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் பூ வசந்தா தலைமையில், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜாபாபு, மணச்சநல்லூர் வேளாண்மை உதவி இயக்குனர், செல்வராணி,





திருச்சி மாவட்ட வேளாண்மை உதவி இயக்குனர் (பயிர் காப்பீடு), திருச்சி மத்திய உயிரியல் கட்டுப்பாட்டு மைய விஞ்ஞானிகள், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள், திருச்சி மாவட்ட வேளாண் துறை அலுவலர்களுடன் மக்காச்சோள வயல் ஆய்வு மேற்கொண்டனர்.

சில பகுதிகளில் மக்காச்சோள படைப்புழு தாக்குதல் ஆங்காங்கே தென்படுவது கண்டறியப் பட்டது. இந்தியாவில் படைப்புழுவின் தாக்குதலானது 2018 ஆம் ஆண்டு மே மாதம் முதல் மக்காச்சோளத்தை பயிரிடப்படும் பல்வேறு மாநிலங்களில் அதிக சேதத்தை உண்டு பண்ணுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

இதனை நிவர்த்தி செய்து படைப்புழு தாக்குதலை கட்டுப்படுத்த கீழ்க்கண்ட தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வழிமுறைகளை விவசாயிகள் கடைபிடிக்குமாறு சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் வலியுறுத்துகிறது.

### சேத அறிகுறிகள்

இளம்புழுக்களானது இலையில் உள்ள பச்சயத்தை சுரண்டி உண்ணுகின்றன. இலைகளானது பச்சயத்தை இழந்து வெண்ணிறமாக காட்சியளிக்கின்றன. இலைகளில் வட்டவடிவ அல்லது நீள்வட்ட வடிவ ஒழுங்கற்ற வடிவில் துளைகள் காணப்படும். புழுவானது கதிர்களையும் சேதப்படுத்தி மகசூல் இழப்பினை ஏற்படுத்துகின்றன. பயிரின் நடுகுருத்துப் பகுதி மற்றும் கதிரின் உள்ளே புழுவும் அதன் எச்சமும் காணப்படும்.

### வாழ்க்கைப் பருவம்

புழுவின் தலைப்பகுதியில் தலையில் Y வடிவ அமைப்பு இருப்பதை காணலாம். புழுவின் வயிற்றுப்பகுதியின் மேற் பரப்பில் சதுர வடிவில் நான்கு கருமை நிறப்புள்ளிகள் காணப்படும்.

அந்துப்பூச்சியின் முன் இறக்கையானது சாம்பல் கலந்த பழுப்பு நிறத்தில் வெந்நிற திட்டுக்களுடன் காணப்படும். பின் இறக்கையானது வெண்மை நிறத்தில் இருக்கும்.


Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

## மேலாண்மை முறைகள்



கடைசி உழவின் போது ஒரு எக்டருக்கு 250 கிலோ வேப்பம் புண்ணாக்கு இட வேண்டும். ஒரு கிலோ விதைக்கு சயான்ட்ரனி புறொல் 19.8% + தயமீதக்சிம் (19.8%F.S) 4 மிலி கொண்டு விதை நேர்த்தி செய்து விதைக்கவும். மக்காச்சோளத்தை இறவை பயிராக பயிரிடும் பொழுது வரப்பு பயிராக மூன்று வரிசைகளில் தட்டைப்பயிறு, எள், துவரை அல்லது சூரியகாந்தி பயிர்களையும் மானாவாரி பயிராக பயிரிடும் பொழுது தீவனச் சோளத்தை பயிரிட வேண்டும். அந்துப்பூச்சியின் நடமாட்டத்தை கண் காணிக்க இனகவர்ச்சி பொறிகளை ஒரு எக்டேருக்கு 12 என்ற எண்ணிக்கையில் வைக்க வேண்டும்.




## பூச்சிக்கொல்லி மருந்து

1. பயிரின் வயது 15-20 நாட்கள் இருக்கையில் தாக்குதல் கண்டறியப்பட்டால்,

- குளோரான்ட்ரனிபுரோல் (18.5 எஸ்சி) ஒரு ஏக்கருக்கு 80 மி.லி (கைத்தெளிப்பான் மூலம் ஒரு டேங்குக்கு 4 மிலி, விசைத் தெளிப்பான் மூலம் 13 மிலி) (அல்லது)
- புளுபெண்டியமைடு (480 எஸ்சி) ஒரு ஏக்கருக்கு 100 மி.லி (கைத்தெளிப்பான் மூலம் ஒரு டேங்குக்கு 5 மிலி, விசைத் தெளிப்பான் மூலம் 16.5 மிலி) (அல்லது)
- அசாடிராக்டின் (1500 பிபிஎம்) ஒரு ஏக்கருக்கு 100 மி.லி (கைத்தெளிப்பான் மூலம் ஒரு டேங்குக்கு 5 மிலி, விசைத் தெளிப்பான் மூலம் 16.5 மிலி)

2. பயிரின் வயது 35-40 நாட்கள் இருக்கையில் தாக்குதல் கண்டறியப்பட்டால்,

- எமாமெக்ட்டின்பென்சோயேட் (5 எஸ்ஜி) ஒரு ஏக்கருக்கு 80 மி.லி (கைத்தெளிப்பான் மூலம் ஒரு டேங்குக்கு 4 மிலி, விசைத் தெளிப்பான் மூலம் 13 மிலி) (அல்லது)

- நோவலூரன் (10 இசி) ஒரு ஏக்கருக்கு 300 மி.லி (கைத்தெளிப்பான் மூலம் ஒரு டேங்குக்கு 15 மிலி, விசைத் தெளிப்பான் மூலம் 50 மிலி) (அல்லது)

- ஸ்பைனட்டோரம் (11.70 எஸ்சி) ஒரு ஏக்கருக்கு 100 மி.லி (கைத்தெளிப்பான் மூலம் ஒரு டேங்குக்கு 5 மிலி, விசைத் தெளிப்பான் மூலம் 16.5 மிலி) 3. பயிரின் வயது 60 நாட்கள் இருக்கையில் தாக்குதல் கண்டறியப்பட்டால்,

- ஸ்பைனட்டோரம் (11.70 எஸ்சி) ஒரு ஏக்கருக்கு 100 மி.லி (கைத்தெளிப்பான் மூலம் ஒரு டேங்குக்கு 5 மிலி, விசைத் தெளிப்பான் மூலம் 16.5 மிலி) (அல்லது)

- எமாமெக்ட்டின்பென்சோயேட் (5 எஸ்ஜி) ஒரு ஏக்கருக்கு 80 மி.லி (கைத்தெளிப்பான் மூலம் ஒரு டேங்குக்கு 4 மிலி, விசைத் தெளிப்பான் மூலம் 13 மிலி)

குறிப்பு : கைத்தெளிப்பானை பயன்படுத்தும் பொழுது ஒரு ஏக்கருக்கு பரிந்துரைக்கப்பட்ட மருந்தினை 200 லிட்டர் தண்ணீரிலும், விசைத்தெளிப்பான் கொண்டு தெளிக்கும் போது 60 லிட்டர் தண்ணீரிலும் கலந்து தெளிக்க வேண்டும்.

பூச்சிக்கொல்லி மருந்துடன் ஒட்டும் திரவம் (5 மி.லி/10 லிட்டர்) காலை அல்லது மாலை வேலைகளில் இலை மற்றும் குருத்துப்பகுதி நன்றாக நனையும்படி தெளிக்க வேண்டும்.

ஒரே மருந்தினை திரும்பத் திரும்பத் தெளிக்காமல் சுழற்சி முறையில் தெளிக்க வேண்டும். சலவை சோப்பு மற்றும் ஷாம்பு போன்ற பொருட்களை பூச்சி மருந்துடன் கலந்து தெளிக்க கூடாது.

மேலும் விவரங்களுக்கு 0431 2962854, 91717 17832 என்ற எண்ணை அலுவலக நேரத்தில் (காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை) தொடர்பு கொள்ளவும். மேற்கண்ட தகவல்களை சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜாபாபு தெரிவித்தார்.

# உயிர்ம விதை நேர்த்தி முறைகள் மற்றும் பயன்கள்

உயிர்ம வேளாண்மை, முறையில், மண்ணின் பௌதீக, ரசாயன மற்றும் உயிரியல் பண்புகள் மண்வளம் மேம்படும். இதனால் பயிர் வளர்ச்சிக்கு உகந்த எல்லா சத்துக்களும் கிடைப்பதால், விளைச்சல் பெருகுவதோடு, தரமான விளை பொருள்களும் கிடைக்கும். பொதுவாக, பயிர் விளைச்சலானது விதைப்பிற்கு தேர்ந்தெடுக்கப் படும் விதைகளின் தரத்தைப் பொறுத்துள்ளது. தரமனா விதைகள் மற்றும் மேம்பட்ட வேளாண் தொழில் நுட்பங்களை கையாள்வதால், சுமார் 40 சதவிகிதம் அதிகரித்த விளைச்சல் அதிகம் பெறலாம். உயிர்ம விதை உற்பத்தி சாதாரண விதை உற்பத்தி போலவே சில தனிப்பட்ட தொழில்நுட்பங்களை கையாள வேண்டும்.

## விதை நேர்த்தி

பொதுவாக உயிர்ம விதை உற்பத்தில் விதை நேர்த்திக்கு உயிர் உரங்கள் தாவர இலைக் கரைசல்கள், இலைப்பொடிகள், பஞ்ச கவ்வியம் மற்றும் உயிர் கட்டுப்பாட்டுக் காரணிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தலாம்.

| உயிர்ம விதை நேர்த்தி முறைகள் | பயன்கள் |
|---|---|
| விதைகளை கோமியத்தில் ஊற வைத்தல் | விதை முளைப்பது மற்றும் வேர் வளர்ச்சியை துரிதப்படுத்துகிறது. |
| களிமண் விதைப்பூச்சு விதை | முளைப்பு மற்றும் வேர் வளர்ச்சியை துரிதப்படுத்துகிறது |
| ட்ரைகோடெர்மா மற்றும் பேசில்லஸ் சப்டிலிஸ் | வேர் சம்பந்தமான நோய்கள் கட்டுப்படுத்துகிறது |
| சீமை அகத்தி பட்டை கரைசல், வசம்பு பொடி கரைசல் | விதை மூலம் பரவும் நோய்கள் மற்றும் சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துகிறது. |
| எருக்கு இலைக்கரைசல் | நெல்லித் தண்டு துளைப்பானைக் கட்டுப்படுத்துகிறது. |
| அரளி இலைக்கரைசல் | வெங்காயத்தில் நுனி கருகல் நோயைக் கட்டுப்படுத்துகிறது. |
| புங்கம் விதைக் கரைசல் | சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துகிறது. |
| டிரைக்கோடெர்மா விரிடி 4 கிராம் /கிலோ | காய்கறிப் பயிர்களில் பூஞ்சாண நோயைகளை கட்டுப்படுத்துகிறது. |

## பயிர்களுக்கு பரிந்துரைக்கப்படும் உயிர்ம விதைநேர்த்தி முறைகள்

| பயிர் | விதை நேர்த்தி முறைகள் |
|---|---|
| நெல் | விதைப்பிற்கு முன் நெல் விதைகளை பஞ்ச காவ்யாவில் 30 மணி நேரம் ஊறவைத்தல் அல்லது நெல் விதைகளை 20 சதவீதம் வசம்பு கரைசலில் (500 கிராம்/பவுடர்/ 2.5 லிட்டர்/தண்ணீர்) 30 நிமிடங்கள் ஊற வைத்து பின்பு காடாதுணியில் கட்டி வைத்தல் |
| கொண்டைக்கடலை | விதைகளை 20 சதவிகிதம் புதினா இலை கரைசலில் 12 மணி நேரம் ஊற வைத்து விதைத்தல் அல்லது ஒரு கிலோ விதை களை மஞ்சள் (50 கிராம்) மற்றும் வசம்பு (15 கிராம்) பவுடரில் 10 மில்லி கலந்து 10 நிமிடம் கழித்து விதைத்தல் |
| பயறு வகைப் பயிர்கள் | விதைகளை டிரைக்கோடெர்மா விரிடி 4 கிராம் என்றளவில் விதை நேர்த்தி செய்து விதைத்தல் |
| மக்காச்சோளம் | விதைகளை 2% பஞ்சகவ்யா கரைசலில் 6 மணி நேரம் ஊறவைத்து விதைத்தல் |
| கம்பு மற்றும் ராகி | விதைகளை 2% பஞ்சகவ்ய கரைசலில் 6 மணி நேரம் ஊறவைத்து விதைத்தல் |
| காய்கறி வகைகள் டிரைக்கோடெர்மா | விதைகளை (விரிடி 4 கிராம்/கிலோ விரிடியில் விதை நேர்த்தி செய்து விதைத்தல், விதைகளை 20% வசம்பு கரைசலில் (ஒரு பங்குகரைசலில் 5 மடங்கு தண்ணீருடன் கலத்தல்) 20 நிமிடத்தில் ஊறவைத்து விதைத்தல் |

உயிர்ம வேளாண்மையைக் கடைப்பிடிப்பதன் மூலம் இயற்கை ஆதாரங்களையும், மண்வளத்தையும் பாதுகாத்து சுற்றுச்சூழல் மாசுபாட்டைத் தவிர்க்கலாம். எனவே, அங்கக வேளாண்மையைப் பின்பற்றி தரமான பாதுகாப்பான உணவையும், மாசற்ற சுற்றுச்சூழலையும் நம் வருங்கால சந்ததியினர் அளிப்பது நமது கடமையாகும்.

மேற்கண்ட இந்த தகவல் இராமநாதபுரம் மாவட்டத்திற்கான மதுரை சரக விதைப்பரிசோதனை அலுவலர், ம.மகாலட்சுமி, பரமக்குடி விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் ச.முருகேஸ்வரி ஆகியோர் தெரிவித்துக் கொண்டனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

## ஒரே நேரத்தில் இரட்டை வருமானம்

# நெல் வயல் வரப்பில் உளுந்து சாகுபடி

திருவாரூர், டிச.11

நெல் வயல் வரப்பில் உளுந்து சாகுபடி செய்து கூடுதல் லாபம் பெறலாம் என திருவாரூர், விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் ஜெயபிரகாஷ் கூறியுள்ளார்.

திருவாரூர் மாவட்டத்தில், சம்பா மற்றும் தாளடி பருவத்தில் நெல் சாகுபடி செய்யப்பட்டு வளர்ச்சிப் பருவத்தில் உள்ளது. தற்போது மழை பெய்து வருவதால் வயல் வரப்பில் உள்ள ஈரப்பதத்தை பயன்படுத்தி விவசாயிகள் உளுந்து சாகுபடி செய்து உள்ளனர். மழை பெய்வதால் அதன் மூலம் கிடைக்கும் ஈரப்பதத்தை பயன்படுத்தி உளுந்து சாகுபடி செய்வதனால் கூடுதல் லாபம் பெற்று விவசாயிகள் தங்களது பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளலாம். மேலும், வயல் வரப்புகளில் களைச்செடிகள் வளராமல் தடுக்கப்படுகிறது. நேல் சாகுபடி அல்லாத காலங்களில் களைச்செடிகள் பூச்சிகளுக்கு மாற்று வாழ்விடமாக அமைகிறது. எனவே, வரப்பில் உளுந்து சாகுபடி செய்யும் போது பூச்சிகளின் வாழ்க்கை சுழற்சி பாதிக்கப்பட்டு தீமை செய்யும் பூச்சிகள் கட்டுப்படுத்தப்பட்டு நன்மை செய்யும் பூச்சிகள் அதிகம் பெருக்கம் அடைகிறது.

மேலும், இதன் மூலம் ரசாயன பூச்சிக்கொல்லி மருந்து தெளிப்பதை தவிர்கலாம். உளுந்து பயிர் காற்றில் உள்ள தழைச்சத்து கிரக்கித்து வேர் முடிச்சிகளில் சேகரிக்கும் தன்மையை கொண்டு இருப்பதால், மண்ணின் வளமும் கூடுகிறது. வரப்பு உளுந்து சாகுபடியின் போது வரப்புகளில் உள்ள களைச்செடிகளை அகற்றிவிட்டு ஏக்கருக்கு 3 கிலோ விதையை 30 சென்டி மீட்டர் இடைவெளியில் ஊன்ற வேண்டும்.

வரப்பு உளுந்து சாகுபடிக்கு என்று தனி கவனம் செலுத்த தேவையில்லை.இதற்கு தேவையான உளுந்து விதைகள் ஏ.டி.டீ – 5, வம்பன் – 8 மற்றும் விதை நேர்த்திக்கு தேவையான பாஸ்போ பாக்டீரியா, ரைசோபியம், சூமோமோனஸ் போன்றவை மாவட்டத்தில் உள்ள அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் 50 சதவீத மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது என கூறினார்.

# கால்நடை வளர்ப்பில் மேலாண்மை முறைகள் மற்றும் தீவன பயிர் சாகுபடி தொழில்நுட்பங்கள் பயிற்சி



கடலூர், டிச.11

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில், 11.12.24 அன்று கால்நடை வளர்ப்பில் மேலாண்மை முறைகள் மற்றும் தீவனபயிர் சாகுபடி தொழில் நுட்பங்கள் பற்றிய பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சியை வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க.நடராஜன், துவக்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார். முனைவர் P.சிலம்பரசன், கால்நடை பல்கலைக்கழகம், பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்,கடலூர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு கால்நடை பற்றிய அனைத்து விவரங்களும் எடுத்துத்துரைத்தார். மேலும் மாட்டு இனங்கள், மாடுகளை தேர்ந்தெடுத்தல், கொட்டகை அமைத்தல், தீவன மேலாண்மை, கன்று மற்றும் கிடாரி மேலாண்மை, இனப்பெருக்க மேலாண்மை, தூய்மை பால் உற்பத்தி மற்றும் மதிப்புகூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்தல், பற்றி விவசாயி களுக்கு விரிவாக விளக்கினார். மேலும் செயல் விளக்கமாகவும் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது.

இப்பயிற்சியில் முனைவர் கி. பாரதிகுமார், முனைவர் சுகுமாறன், முனைவர் ஜெ.ஜெயகுமார், முனைவர் க.கலை செல்வி, கலந்து கொண்டனர். இப்பயிற்சியில் கடலூர் மாவட்டத்தை சேர்ந்த 40 விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**